பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 07 2025 **MONDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் முன்னேற்றப் பயணத்தில் பழங்குடியினரின் பங்களிப்பை உறுதிப்படுத்தும் வகையில் மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. பிரதமரின் ஊட்டச்சத்து உறுதித்திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 11 கோடி குழந்தைகள் பயனடைந்து வருவதாக மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

3. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் கேரள முதலமைச்சருமான வி எஸ் அச்சுதானந்தன் திருவனந்தபுரத்தில் இன்று காலமானார். அவருக்கு வயது 101.

4. பங்களாதேஷில் இன்று நேரிட்ட விமான விபத்தில் 19 பேர் உயிரிழந்தனர்.

5. உலகக்கோப்பை மகளிர் செஸ் போட்டியில், இந்தியாவின் திவ்யா தேஷ்முக் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள்--

**<<<<<<>>>>>**

நாட்டின் முன்னேற்றப் பயணத்தில் பழங்குடியினரின் பங்களிப்பை உறுதிப்படுத்தும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், மத்திய அரசின் திட்டங்களோடு பழங்குடியின மக்களை இணைக்கும் நோக்கில் ஆதி கர்மயோகி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

பல்வேறு துறைகளில் தாங்கள் பெற்றுள்ள பாரம்பரிய அறிவு மற்றும் அனுபவங்கள் மூலமாக நாட்டின் கொள்கைகள் அனைத்து மக்களுக்கும் சென்று சேருவதற்கான பங்களிப்பை நல்க வேண்டும் என்று இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற பழங்குடியினரிடம், குடியரசுத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

**<<<<<<>>>>>**

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் எதிர்க்கட்சியினரின் அமளி காரணமாக நாளை காலை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் இரண்டு முறை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் மாலை 4 மணிக்கு அவை கூடியபோது, காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷம் எழுப்பியதையடுத்து மக்களவை நாளை வரை ஒத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

மாநிலங்களவை இன்று காலை கூடியபோது, புதிய உறுப்பினர்களுக்கு அவைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

அதன்பின்னர், பல்வேறு காரணங்களை முன்வைத்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, நண்பகல் 12 மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடியபோது, சரக்கு கப்பல் மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதுதொடர்பான விவாதத்தின்போது, சாகர் மாலா திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் பல்வேறு துறைமுகங்கள் நவீனப்படுத்தப்பட்டு, அவற்றின் திறன் அதிகரிக்கப்பட்டு வருவதாக மத்திய துறைமுகங்கள் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள பெரும்பாலான துறைமுகங்கள் சாலை மற்றும் ரயில் வழித்தடத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

2047-ல் இந்தியா உலகின் ஐந்து முன்னணி கப்பல் கட்டும் நாடுகளில் ஒன்றாக திகழும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு செயலாற்றி வருவதாக தமது உரையில் குறிப்பிட்டார்.

இதனைத்தொடர்ந்து, மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<>>>>>

நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டிலிருந்து பணம் கைப்பற்றப்பட்ட விவகாரம் தொடர்பாக அவரை பதவிநீக்கம் செய்யக்கோரும் தீர்மானத்தை, மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லாவிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று சமர்ப்பித்தனர்.

அந்த தீர்மானத்தில் பிஜேபி, காங்கிரஸ், தெலங்கு தேசம், ஐக்கிய ஜனதாதளம் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த 145 மக்களவை உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

இதற்கிடையே, நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதவிநீக்கம் செய்யக்கோரும் தீர்மானம் தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மாநிலங்களவைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

இதில் 50-க்கும் மேற்பட்ட மாநிலங்களவை உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

பிரதமரின் ஊட்டச்சத்து உறுதித்திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 11 கோடி குழந்தைகள் பயனடைந்து வருவதாக மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதுதொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில், பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலும், அவர்களுக்கு ஊட்டச்சத்து உணவை வழங்கும் வகையிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ், 24 லட்சம் பேர் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளதாகவும், அவர்களில் 90 சதவீதம் பேர் பெண்கள் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உணவு தயாரிப்பதற்கான பொருட்செலவு ஒதுக்கீடு ஒன்பது புள்ளி ஐந்து சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கடந்த மே மாதம் மத்திய அரசு அறிவித்ததாகவும், இதனால் நடப்பு நிதியாண்டில் கூடுதலாக தொள்ளாயிரத்து 54 கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

கீழடி அகழாய்வுத் தொடர்பான திருத்தப்பட்ட அறிக்கையை தமிழக தொல்லியல் துறையிடமிருந்து இந்திய தொல்லியல் ஆய்வு மையம் கோரவில்லை என்று மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவித்த பதிலில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் கடந்த மே மாதம் 20 லட்சத்து 6 ஆயிரம் பேர் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 18 முதல் 25 வயதுக்கு உட்பட்ட 5 லட்சத்து 60 ஆயிரம் பேர் புதிய உறுப்பினர்களாக சேர்ந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில், 2 லட்சத்து 62 ஆயிரம் பேர் பெண்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு அதிகரித்து வருவதை வெளிகாட்டும் சான்றாக இது அமைந்துள்ளது என்று மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளப்பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், வர்த்தகம் மற்றும் பொருளாதார அதிகாரமளித்தலை எளிதாக்கும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக இது அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

ஹரியானா மாநிலத்தின் 19-ஆவது ஆளுநராக பேராசிரியர் திரு **Ashim Kumar Ghosh** இன்று பதவியேற்றுக்கொண்டார்.

சண்டிகரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பஞ்சாப், ஹரியானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு **Sheel Nagu** அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

<<<<<<>>>>>

அடல் புத்தாக்க இயக்கத்தின் இயக்குனராக திரு **Deepak Bagla** இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதுதொடர்பாக, நித்தி ஆயோக் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற அரசின் இலக்கை அடைவதில் இந்த இயக்கத்தின் புதுமை முயற்சிகள் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் கேரள முதலமைச்சருமான வி எஸ் அச்சுதானந்தன் திருவனந்தபுரத்தில் இன்று

காலமானார். அவருக்கு வயது 101.

அவரது மறைவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும், கேரளாவின் வளர்ச்சிக்காகவும் அச்சுதானந்தன் நீண்டகாலம் சேவையாற்றினார் என்று கூறியுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கேரளாவின் முன்னேற்றம் மற்றும் மக்கள் சேவைக்காக அவர் தனது வாழ்வை அர்ப்பணித்தார் என்று புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், கொள்கை ரீதியிலான அரசியல் மற்றும் மக்கள் சேவையின் அடையாளமாக அவர் திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், விவசாயிகள் பயன்பெறும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக, தமிழகத்தின் ராணிப்பேட்டை மாவட்டத்தில் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 7 ஆயிரத்து 759 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

இது விவசாயம் மேற்கொள்ள பெரிதும் உதவிகரமாக இருப்பதாக பயனாளி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***Sound Byte - சுமன் - 25 'Sec.)***

<<<<<<>>>>>

பங்களாதேஷில் இன்று நேரிட்ட விமான விபத்தில் விமானி உட்பட 19 பேர் உயிரிழந்தனர். 100-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அந்நாட்டு விமானப்படைக்கு சொந்தமான பயிற்சி விமானம் தனியார் கல்லூரி கட்டடம் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக எமது தெய்தியாளர் தெரிவிக்கிறார்.

விபத்து நடந்த இடத்தில் பங்களாதேஷ் ராணுவத்தினர் மற்றும் தீயணைப்புப்படையினர், மீட்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விபத்தைத் தொடர்ந்து, ஒரு நாள் நாடு தழுவிய துக்கம் அனுசரிக்கப்படுவதாக பங்களாதேஷ் இடைக்கால அரசு அறிவித்துள்ளது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் செஸ் போட்டியில், இந்தியாவின் திவ்யா தேஷ்முக் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜார்ஜியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதியில் அவர், மற்றொரு இந்திய வீராங்கனையான ஹரிக்கா துரோணவல்லியை வென்றார்.

-------------------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Anika Dubey** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**--------------**

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Adil Kalyanpur** வெற்றிபெற்றார்.

**<<<<<<>>>>>**